# அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரம்

**பொருளடக்கம்**


- முன்னுரை
- வாசிப்பு எனும் அழகியல்
- புத்தகங்கள் ஆகிய நண்பர்கள்
- முடிவுரை


**முன்னுரை**

சிறந்த நண்பன்: "நான் வாசிக்காத புத்தகங்களை வாங்கி வந்து என்னை சந்திப்பவனே சிறந்த நண்பன்

ஆபிரகாம் லிங்கன்

மேல் கூறப்பட்ட சிறந்த பொன் சொல்லை கூறிய அமெரிகாவின் முந்தைய ஜனாதிபதி இவர்களை போன்ற சிறந்த தலைவர்கள் புத்தக வாசிப்பை இவ்வளவு நேசித்தார்கள்? அதன் விடை புத்தகங்கள் ஒரு மனிதனை மனிதனாக்கும் மேலும் மனிதத்துவம், அறிவாற்றல் போன்ற சிறந்த பண்பை வளர்கின்றது

ஆதனால் நம் முன்னோர்கள் "ஒதாமல் ஒருநாளும் இருக்கவேண்டும்" என்று புத்தக பயன்பாட்டின் மகத்துவத்தை அறிவுறுத்தியுள்ளனர்.

**வாசிப்பு எனும் அழகியல்**

மனிதனுடைய ஆகச்சிறந்த கண்டுபிடிப்பு புத்தகங்கள் தான் என்கிறார் அல்பிரட் ஐன்ஸ்டன், ஆம் மனிதன் சிந்திக்க வல்ல ஒரு விலங்கு அதனால்தான் வாசிக்கவும் அதனை யோசிக்கவும் திறனுடையவனாக இருக்கிறது. பல படைப்புகளையும் படைக்கவும் முடிகிறது.

மனிதனுடைய உள்ளத்தில் உள்ள உணர்வுகளை அறிவையும் அனுபவத்தையும் திறன்களையும் பல வாசகர்களுக்கும் பகிர்ந்து கொள்ளும் மனித மனங்களை அத்தனை அழகாக மாற்றுவதனால் இவை ஒரு அழகியல் என்றால் அது மிகையல்ல

புத்தகங்களாகிய நண்பர்கள்

கல்வியே முதலான மூலதனம் என்று கூறியவர் வாழ்வின் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒருவர் கற்ற கல்வி அவனை உயரச்செய்யும்.

ஒரு நல்ல நண்பர்களால் எவ்வாறு தொதேழாடு தோழ் நிற்பார்களோ, மகிழ்ச்சி அளிப்பார்களோ, நல்லபுத்தகங்கள் நம்மை செதுக்கும் இதனால் தான் ஜீலியல் சீசர் "1000 புத்தகங்களை வாசித்தான் என்று வழிகாட்டி என்றார்."

ஓர் நல்ல புத்தகம் 100 நண்பர்களுக்கு சமம் என்று கூறுவருண்டு, அதலால் புத்தகங்களை எனது நண்பனாக்கி கொள்வது வாழ்வியல் எம்மை உயர்த்தும்.

புத்தகம் வாசிக்கும் மனிதனிடத்தில் பல நல்ல மாற்றங்கள் வேண்டும் என்ற மன உறுதி ஏற்படும் தவறை எவ்வாறு தடுப்பது என்பதை பல வாழ்க்கை வரலாறு புத்தகங்கள் வாயிலாக நாம் முன்கூட்டியே அறிந்து கொள்ள முடிகிறது.

முடிவுரை

ஒரு நூலாக திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது.

சுவாமி விவேகானந்தா

அதாவது புத்தகங்களை மனிதன் வாசிப்பதனால் உலகில் குற்ற செயல்கள் குறையும் என்று விவேகானந்தர் கூறியதன் மூலம், புத்தகம் எவ்வளவு வாழ்விலும், பண்புகளை மேன்மை படுத்துகிறது.

இன்றைய சமுதாயத்தில் வாசிப்பு பழக்கம் வெகுவாக குறைந்துள்ளது இதனால் தான் சமூகம் இவ்வாறான சீர்கேடுகளை எதிர்கொள்கிறது ஆகவே நாம் வாசிப்பை ஊக்கப்படுத்துவோம் ஒரு நூலகம் எரிக்கப்படுகின்ற போது அங்கு நல்ல மனிதர்கள் எரிக்கப்படுகிறார்கள்.

B.அன்வர் இரண்டாம் ஆண்டு அமைப்பியல் துறை